# காக்கை வன்னியன் முதல் கதிர்காமர் வரை

## பகுதி II

13

தமிழீழத்தையும் - ஸ்ரீலங்காவையும் தங்களுடைய நிர்வாக வசதிக்காக ஆங்கிலேயர்கள் ஒன்றாக இணைத்தபின், டொனமூர் அரசியல் அமைப்புச் சட்டத்தின் கீழ் நடத்தப்பட்ட முதலாவது தேர்தலை - அதாவது வயது வந்த அனைவருக்கும் சர்வசன வாக்குரிமை வழங்கப்பட்டபின் நடத்தப்பட்ட தேர்தலை யாழ்ப்பாண மக்கள் ஒட்டு மொத்தமாகப் புறக்கணித்து விட்டனர்

முன்வைத்து ஆங்கிலேய காலனிய அரசுக்கு எதிரான தீவிரமான போராட்டங்கள் எதையும் முன்னெடுக்காதிருந்த காலகட்டத்தில், அவர்களுக்கும் (சிங்கள மக்களுக்கும்) சேர்த்து யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸ் போராட்டம் நடத்தியது, இனவாதமற்ற முற்போக்கான செயல் என்று பாராட்டப்படுகின்றது.

இலங்கை தேசியம், இலங்கை தேசிய அரசு என்ற கண்ணோட்டத்தில் நின்று பார்த்தால் இந்தக் கருத்தும், இந்தப் பாராட்டும் சரியானதாக இருக்கும்.

ஆனால் இலங்கை தேசியத்தை பௌத்த சிங்கள தேசிய வாதம் விழுங்கி ஏப்பம் விட்டு விட்ட இன்றைய நிலையில் இருந்து பார்த்தால், வாலிபர் காங்கிரஸ் தலைவர்கள் தப்புக்

**பௌத்த சிங்கள தேசிய வாதத்தின் முகமூடியை கிழித்தெறிந்து, தமிழ்த் தேசியத்தை அழித்து, தமிழர் தாயகத்தை விழுங்கத்துடிக்கும் அதன் கோர முகத்தை வெளிச்சத்துக்குக் கொண்டு வராமல், தமிழர்களை இலங்கை தேசியத்துக்காகப் போராடும்படி தூண்டியதானது பௌத்த சிங்கள தேசிய வாதிகளின் வலையில் தமிழ் மக்கள் தாங்களாகவே போய் விழும்படி செய்வித்த ஒரு செயலாகும்.**

தலைவர்கள் எவ்வாறு 'காரிய வாதி'களாகவும் தமிழ் தலைவர்கள் எப்படி அடி முட்டாள்

யும் ஒன்றுக் கொன்று முரண்பட்ட தன்மைகளைக் கொண்டவை.

ஐரோப்பிய சமூகம் தன்னுடைய வளர்ச்சிப் போக்கில் ஒரு படிமுறைத் தன்மைகளைக் கொண்டதாக உள்ளது. இங்கு ஒரு சமூக அமைப்பை தகர்த்து விட்டே இன்னொரு சமூக அமைப்பு உருவாகி இருக்கிறது. இங்கே தொடக்க காலத்திலி

அதனுடன் சமரசம் செய்து கொண்டு, அதை அப்படியே உள்வாங்கிக்கொண்டு தன்னை நிலை நிறுத்திக் கொள்கிற தன்மையே அங்குள்ளது.

வெளிப்படையாகப் பார்த்தால் ஐரோப்பாவில் உள்ளது போல் ஒரு முதலாளித்துவ அல்லது தரகு முதலாளித்துவ சமூக அமைப்புத்தான் அங்கிருப்பது போலத் தோன்றும். ஆனால் கூர்ந்து கவனித்தால் அடிமை உடமை சமூகமும் (துட்ட காமினிக்கு புத்துயிரளித்தல்) அடிமை சமூகமும் (மலையக மக்களை நாடற்றவர்களாக வைத்துக் கொண்டு அவர்களது உழைப்பை சுரண்டல்) நிலப்பிரபுத்துவ சமூகமும் (சாதிய அமைப்பு) சேர்ந்து முதலாளித்துவ அல்லது தரகு முதலாளித்துவ சமூக அமைப்புக்கு ஏற்ற விதத்தில் உருவாக்கப்பட்ட 'ஒரு கலவை சமூக அமைப்புத்தான்' அங்குள்ளது.

இந்த பழைய சமூக அமைப்புக்கள் முழுக்க முழுக்க அதே தன்மையோடு இல்லையென்றாலும் அவற்றினது சாராம்சங்கள் இன்றுள்ள சமூக அமைப்பில் மிக ஆழமாக உள்வாங்கப்

# பிரித்தானியர் போட்ட தீனியில் மதிமயங்கிய தமிழ்த் தலைவர்கள்

இலங்கை முழுவதிலுமுள்ள மக்கள் அதில் கலந்துகொண்டு வாக்களித்து தங்களது பிரதிநிதிகளைத் தெரிவு செய்திருந்த நேரத்தில், யாழ்ப்பாண மக்கள் அதில் பங்கெடுக்காததால் முதலாவது சட்ட சபையில் யாழ்ப்பாண மாவட்டத்துக்குரிய 4 பிரதிநிதித்துவமும் வெறுமையாக இருந்தன.

இத் தேர்தல் பகிஷ்கரிப்பை ஏற்பாடு செய்திருந்த யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸ் தமிழ் தேசியம் தமிழர் தாயக மீட்பு

கணக்குப் போட்டு விட்டார்கள் என்ற முடிவுக்கே வரமுடியும்.

அதாவது பௌத்த சிங்கள தேசிய வாதத்தின் முகமூடியை கிழித்தெறிந்து, தமிழ் தேசியத்தை அழித்து, தமிழர் தாயகத்தை விழுங்கத்துடிக்கும் அதன் கோர முகத்தை வெளிச்சத்துக்குக் கொண்டு வராமல், தமிழர்களை இலங்கை தேசியத்துக்காகப் போராடும்படி தூண்டியதானது இலங்கை தேசியம் என்ற முகமூடிக்குள் மறைந்து கொண்

**பிரித்தானிய காலனிய ஆட்சியாளர்கள், இலங்கையை நிறையவே சுரண்டவேண்டும் என்பதற்காக இலங்கையர்களுக்கு சில வகை 'தீனி' களைப் போட்டார்கள். ஆங்கிலக் கல்வி, அரசு உத்தியோகம் நிலம் வாங்கும் உரிமை, சிறு வர்த்தக உரிமை, சர்வசன வாக்குரிமை, பாராளுமன்ற அமைப்பு முறை, தார் சாலைகள் அமைத்தல், புகையிரதப் பாதைகள் அமைத்தல், முதலானவை அந்தத் 'தீனி' வகையைச் சார்ந்தவை.**

என்கின்ற கொள்கைகளையெல்லாம் கொண்டிருக்கவில்லை. இலங்கை தேசியம் - சிங்களம் தமிழ் இரண்டுக்கும் சம உரிமை, இலங்கை மக்களுக்கு பூரண சுயாட்சி என்கின்ற கொள்கைகளையே அது கொண்டிருந்தது. டொனமூர் அரசியலமைப்பு இவற்றை உறுதிப்படுத்தவில்லை என்ற காரணத்திலேயே அது தேர்தல் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டது.

சிங்களத் தலைவர்களோ, சிங்களக் கட்சிகளோ பூரண சுயாட்சி என்ற கொள்கையை

டிருந்த பௌத்த சிங்கள தேசிய வாதிகளின் வலையில் தமிழ் மக்கள் தாங்களாகவே போய் விழும்படி செய்வித்த ஒரு செயலாகும்.

பொதுவாக யாழ்ப்பாணத் தமிழர்கள் சிங்களவர்களை 'முட்டாள்கள்' என்றும் தாங்கள் புத்திசாலிகள் என்றும் சொல்லிப் பெருமைப்பட்டுக் கொள்வதுண்டு. ஆனால் 1900-ம் ஆண்டிலிருந்து 1977-ம் ஆண்டு வரையான ஒரு முக்கால் நூற்றாண்டு கால அரசியல் வரலாற்றை எடுத்துப் பார்த்தால் சிங்களத்

களாகவும் இருந்திருக்கிறார்கள் என்பது புரியும்.

பிரித்தானிய காலனிய அரசு இலங்கைக்கு சென்றதன் நோக்கம், இலங்கை மக்களின் அரசியல், பொருளாதாரம், கல்வி மற்றும் கலை, கலாச்சாரம் முதலான சகல விடயங்களிலும் அறிவூட்டி வளர்த்து விடுவதற்காகவல்ல.

இலங்கையின் மூலவளங்களை, பொருளாதாரத்தை, மக்களின் உழைப்பை ஈவிரக்கமின்றிச் சுரண்டித் தமது நாட்டுக்கு எடுத்துச் செல்வதுதான் அவர்களின் ஒரே நோக்கம்.

பால் வியாபாரி ஒருவன் தன்னிடமுள்ள கறவை மாட்டுக்கு வைக்கோல், புண்ணாக்கு தவிடு என்று வேளை தவறாமல் கொடுப்பது அந்த மாடு நன்றாக வயிறு நிறையச்சாப்பிட்டு கொழு கொழுவென்று இருக்க வேண்டும் என்ற நல்லெண்ணத்திலல்ல. அதற்கு நிறைய தீனி கொடுத்து அதனிடமிருந்து நிறையப் பால் கறக்க வேண்டும் என்ற வியாபார நோக்கம்தான் அவனுடையது.

அது போலத்தான், பிரித்தானிய காலனிய ஆட்சியாளர்கள், இலங்கையை நிறையவே சுரண்டவேண்டும் என்பதற்காக இலங்கையர்களுக்கு சில வகை 'தீனி' களைப் போட்டார்கள். ஆங்கிலக் கல்வி, அரசு உத்தியோகம் நிலம் வாங்கும் உரிமை, சிறு வர்த்தக உரிமை, சர்வசன வாக்குரிமை, பாராளுமன்ற அமைப்பு முறை, தார் சாலைகள் அமைத்தல், புகையிரதப் பாதைகள் அமைத்தல், முதலானவை அந்தத் 'தீனி' வகையைச் சார்ந்தவை.

ஐரோப்பிய சமூகத்தின் அமைப்பு முறையும் இலங்கையில் இருக்கும் சிங்கள தமிழ் சமூகங்களின் அமைப்பு முறை

ருந்த தாய் வழி; தந்தை வழி சமூக அமைப்புக்களின் பின், இனக்குழுக்கள் கிராமங்கள் நகரங்களின் தோற்றத்தோடு அடிமை சமூக அமைப்பு உருவாகிறது. பின்பு அடிமை சமூக அமைப்பை தகர்த்துக்கொண்டு, அடிமை உடமை சமூக அமைப்பு உருவாகிறது. அதன் பின் அந்த அடிமை உடமை சமூக அமைப்



பைத் தகர்த்துக்கொண்டு நிலப்பிரபுத்துவ சமூக அமைப்பு உருவாகிறது. அதற்குப் பிற்பாடு நிலப்பிரபுத்துவ சமூக அமைப்பை தகர்த்துக்கொண்டு முதலாளித்துவ சமூக அமைப்பு தோற்றம் பெறுகிறது.

இன்றைய இந்த முதலாளித்துவ சமூக அமைப்பில் அடிமை சமூக அமைப்போ, அடிமை உடமை சமூக அமைப்போ, நிலப்பிரபுத்துவ சமூக அமைப்போ எந்தவொரு வடிவத்திலும் மறுசீரமைக்கப்படுவது சாத்தியமற்ற ஒன்றாக இருக்கிறது.

ஆனால் இலங்கையைப் பொறுத்தவரை நிலைமை அவ்வாறில்லை. அங்கே ஒரு சமூக அமைப்பை தகர்த்துக்கொண்டு இன்னொரு சமூக அமைப்பு உருவாகவில்லை. காலத்தின் தேவையை ஒட்டி புதிய சமூக அமைப்பு பழைய சமூக அமை-ப்பை, தகர்ப்பதற்கும் பதில்

பட்டிருக்கின்றன.

இதை நன்கு புரிந்துகொண்ட ஆங்கிலேயர்கள் இந்த சமூக அமைப்பில் உள்ள ஆளும் வர்க்கத்திற்கு ஆங்கிலக்கல்வி அளித்து ஆங்கில மூளையில் சிந்திக்க வைத்து பாராளுமன்ற நாற்காலிக்கான ஓட்டப்பந்தயத்துக்கு தயார் படுத்துவதன் மூலம் தங்களது நோக்கத்தை சுலபமாக நிறைவேற்றிக் கொள்ளலாம் என்று நம்பினார்கள்.

டொனமூர் ஆணைக்குழு இலங்கையர்களுக்கு சர்வசன வாக்குரிமை வழங்குவது என அறிவித்து அதை அமுல் படுத்திய 1931-ம் ஆண்டு காலப்பகுதியில் பாராளுமன்றம் வாக்குரிமை ஜனநாயக ஆட்சி முறை பற்றி இலங்கையிலிருந்த 90% மான சிங்களவர்களுக்கும் சரி தமிழர்களுக்கும் சரி ஒன்றுமே தெரியாது.

தாங்கள் கற்ற ஆங்கிலக் கல்வி மூலம் பிரித்தானிய வெஸ்ட் மினிஸ்டர் ஆட்சி முறை பற்றியும், 'பிரித்தானிய மாதிரி' ஜனநாயகக் கோட்பாடுகள் பற்றியும் அறிந்துகொண்ட யாழ்ப்பாணத் தமிழ் தலைவர்களுக்கு, அதுவே உலகத்தின் தலைசிறந்த ஆட்சி முறையாகவும் தலைசிறந்த அரசியல் கோட்பாடுகளாகவும் தெரிந்தன.

அக் காலகட்டத்தில் ஐரோப்பாவிலும், குறிப்பாக பிரான்ஸ், ஜேர்மனியிலும், லெனின் காலத்தைய ரஷ்யாவிலும் உருவாகியிருந்த தேசம், தேசிய இனங்கள், தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமை பற்றிய கோட்பாடுகள் எல்லாம், வெஸ்ட் மினிட்டர் கோட்பாடுகளோடு ஒப்பிடுகையில் அந்தஸ்த்தில் குறைவான வையாகவே இருந்தன.

**- நக்கீரன்**